ஶ்ரீ:
[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்—விகாரிஸ்ரீ மார்கழிமீ 18உ

கலியும், நான்காச்சிரமங்களும்

தொடர்பு

பற்களை உரலாகக் கொண்டவர்களும், யாசிக்காமலும் பிரதிக்கிரகம் செய்யாமலும் யதேச்சையாக அகப்பட்டதைக்கொண்டு காலக்ஷேபம்வேண்டுமென்கிற இச்சையில்லாதவர்களாய் அன்றன்று சந்தோஷத்துடன் காலங்கழிப்பவர்களும், ஈசனிடம் அந்தரங்கபக்தியுடையவர்களும் ப்ராம்மணகோஷ்டியில் விருப்பமுள்ளவர்களும் ப்ரம்மநிஷ்டைபெற்றவர்களும், உக்கிரமாகத்தபஞ்செய்கிறவர்களும், ஈசனை ஹ்ருதயத்தில் தியானிப்பவர்களும் அன்புகூர்ந்து சீடர்கட்கு ப்ரம்மதத்துவத்தையுபதேசிப்பவர்களும், ஹடம், மந்திரம், லயம் முதலிய யோகங்களுள் யாதேனுமொன்றைக் கடைப்பிடித்தவர்களும், கர்மத்தை விரும்பினும் அதன் பலனில் ஆசையற்றவர்களும், வனங்களிலும், பர்னசாலைகளிலும், பர்வதங்களிலும், குகைகளிலும், ஜன சஞ்சாரமில்லாதவிடங்களிலும், புற்றிலும், விசாலமானமரப்பொந்துகள் முதலிய விடங்களிலுமிருப்பினும், சீதம், உஷ்ணம் முதலியவைகளைப் பாராட்டாதவர்களும், ஆத்மவஸ்துவினிடம் நிலைபெற்றவர்களும், தபோவனந்தோறும் நிறைந்து புண்ணியாச்சிரமத்தில் வசிப்பவர்களும், லோகானுக்கிரகத்தில் மிக்க ஆவலுள்ளவர்களும், கிரஹஸ்தாச்சிரமிகள் பூஜிக்கப்பெற்றவர்களும் அவர்களைப் பூஜை செய்பவர்களும் எல்லோருக்கும் ஹிதத்தைச்செய்பவர்களுமான அனேக மஹான்கள் மூன்றுவதாச்சிரமத்தை வகுத்துத் தந்தம் வாழ்நாட்களையெல்லாம் க்ஷேமமாகச் செலுத்தி வந்தார்கள். அத்தகைய மஹான்களான வானப்பிரஸ்தர்கள் இக்கலியில் எங்குமெவருமிலர். ஆகையால் நம் தௌர்ப்பாக்கியம் செப்பத்திறமல்ல. பாருங்கள்! தேசாந்தரத்தவர்களும் சாக்தர்களான மகரிஷிகளின் மகிமையை வெகுவாகக் கொண்டாடுகிறார்கள். அம்மஹான்கள் இந்நாட்டிலடியோடு இல்லாமற் போனதே துர்த்தசைக்கு ஏதுவாயிற்று. இக்காலத்தில் சிலர் அந்தத்தபோவிரதங்களை யனுஷ்டிக்கவியலாது வாசாமாத்திரம் வேதாந்தம்பேசிக்கொண்டு அவ் வழியிலேயே காலங்கழித்து “கலியில் வானப்பிரஸ்தாச்சிரமம் நிஷேதிக்கப்பட்டது’ என்று சம்பிரதாய வார்த்தைகளால் பிதற்றித் திரிகிறார்கள். சன்னியாசமும், நைஷ்டிகபிரமசரியமும், இககலியில் நிஷேதிக்கப்பட்டிருப்பினும் பிக்ஷாமாத்திரம், அதையனேகர்கள் கைக்கொண்டார்கள். பலர் காசுக்கு விதியின்றிப் பிறந்தது முதல்பிரமசாரியென்ற பெயரைவைத்து ஒரு விரதத்தையுமனு

[illegible]

ஷ்டிக்காது ஏற்பட்டுள்ள விரதத்தையும் துலைத்து விடுகிறார்கள். யாஜுஷப் பிரமசாரிகள் உபாகர்மத்தில் க்ஷௌரஞ் செய்து கொள்வதும் தென்னாட்டிலுள்ள பிரமசாரிகள் யாவரும் ஆசௌசத்தை வர்ஜிப்பதும் ஆகிய இவ்விரண்டுமே பிரமசரியத்திற்குரிய லக்ஷணமென்று அறிந்துகொண்டார்கள்போலும் இத்தகைய ஆசிரமத்தையா கிரமமென்றும் மகாபரிசுத்தமான வானப்பிரஸ்தாச்சிரமம் நிஷேதமென்றுமா நம் மகரிஷிகள் கருதினார்கள்! ஒருக்காலுமில்லை. இங்ஙனங் குழறுவது அறியாமையே யன்றி வேறல்ல. வானப்பிரஸ்தாச்சிரமத்தையும் சந்நியாசத்தையும் சிராத்தத்தில் மாம்சம்சேர்ப்பதையும் முன்னோர்கள் நிஷேதித்ததற்குக்காரணம் யாங்ஙனமெனின், புலன்களை யடக்கிச் சித்தசுத்திபெற்றவர்கள் இக்கலியில் கிடைக்காமையால்மெத்தக்கெடுதி நேரிடுமென்ற பீதியாலென்க. விரக்தியில்லாதவர் சந்நியாசத்திற் கனர்கர்களென் றிருப்பினும் வேறுவகையில் பிழைக்க வழியில்லாமைபற்றி சந்நியாசஞ்செய்துகொண்டுபிக்ஷைக்காக அங்குமிங்குமோடித்திரிந்து கவலையுற்று இந்திரிய நிக்கிரகமு மில்லாமல சிவ! சிவ! மகா கஷ்டத்திற் காளாகிறார்கள். அவர்கள் வேதாந்த விசாரஞ் செய்வதுண்டா? வேதாந்தவித்தையில் அதிகார மற்றவர்களும் வேதாக்ஷரமொன்றேனுமப்பியசிக்காது கண்டகதப்பிராணனாகும் சமயததில் ஓர்விதமாகச் சிரத்தை யுடையவர்கள்போலபிநயித்துச் சந்நியாசஞ் செய்து கொள்ளுகிறார்களே. அது சாஸ்திரசம்மதமாகுமா? இது நிற்க. சிலர் நெடுநாள் பிரமசாரிகளாகவேயிருந்து யாதொரு நியமங்களையுமனுஷ்டிக்காது பாபத்திற் சற்றேனு மச்சமின்றிக் கண்டபடி திரிகிறார்களே! அவர்கள் அடையுங் கெதியாதோ? இங்ஙனம் விதி விலக்குகளை யநுசரிக்காதவனாகவாவது வேஷதாரியாய் வானப்பிரஸ்தரொருவரையுங்காணோம். அதற்கோர் காரணமுண்டு. அவ்வேஷந்தரித்தவர்களும் வானப்பிரஸ்தரென்றே கூறப்படுவாரானதுபற்றி அவருக்கு வஸ்திரங் கொடுக்கக் கூடாதென ஸ்மிருதிகள் கூறுகின்றன. சந்நியாசிக்குச் சுவர்ணத்தையும் பிரமசாரிக்குத் தாம்பூலத்தையுங் கிரஹஸ்தனுக்குப் பிக்ஷையையும் வானப்பிரஸ்தனுக்கு வஸ்திரத்தையுங் கொடுப்பவனுக்கு எவ்வளவு கோடி கற்பங் கழிந்தாலும் பிராயச்சித்தமே கிடையாது. அவர்கள் தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்யின் ஒருவாறு பாபம் நீங்குமென்பதாதி யனேக வசனங்களுள்ளன. ஆனால் வானப்பிரஸ்தர்கள்மரவுரியை அரையிலுடுக்கும் வஸ்திரமாகவும் மான்தோலை உத்தரீயமாகவும் வைத்துக்கொள்ளல்வேண்டும். வபனஞ் செய்துகொள்ளுதலும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதும் கலப்பையினல் உழப்பட்ட நிலங்களில் விளையும் தானியங்களையுண்ணுதலுங்கூடா. ஆயின், காய் கனி கிழங்கு இவைகளைப் புசித்தல்வேண்டும். இம்மட்டோ! அவ்வானப்பிரஸ்தர்களுட் சிலர் நான்காவது காலத்தி

[illegible]

லும் சிலர் ஆறுவது காலத்திலும் சிலர் ஒரு மாசத்திற்கு ஒரு முறையும் போஜனஞ்செய்து கிருச்சிரசாந்திராயணம் முதலிய விரதங்களை அனுஷ்டிப்பார்கள். ஆதல்பற்றியே அம் மகான்களின் இவ்விரதங்களையனுஷ்டிப்பது இக் காலத்தார்க்கு மிகவும் கஷ்டமாகும். ஆதலினற்றான் கண்டவாறுஏமாற்றித் திரியும் இக்காலத்தார்க்குஅம்மகான்களின்தெரிசனங் கூடக்கிடைப்பதரிதாயிற்று. அதிலெமக்கோர் சமுசயமுண்டு. அதாவது, இக்கலியின் ஆரம்பம் முதல் வானப்பிரஸ்தர்களில்லையா? அல்லது இப்போது யாவரேனும் வானப்பிரஸ்தர்களாயாகின்றதில்லையா? என்பதே இக் கலிமுதலாகவே வானப்பிரஸ்தர்கள் இல்லையெனின், கல்விக்கடலாகிய மண்டனமிசிரர் வியாசரையும் ஜைமினியையும் தன் வீட்டுக்கழைத்துப் பூசித்தது எந்த யுகத்தில்? உபமன்னியுபகவான்ஸ்ரீகிருஷ்ணருக்குத் தத்துவ உபதேசஞ்செய்தது எந்த யுகத்தில்? அகத்தியர் தமிழ்ப்பாஷையைப் பிரவிர்த்திசெய்தது எந்த யுகத்தில்? இவையெல்லாம் இக்கலியினரம்பத்திலாதலால் அக்காலத்தில் வானப்பிரஸ்தர்கள் இல்லையென்பது பொருந்தாது. பாபங்கள் மேலிட்டிருப்பதால் சிறிது காலமாக வானப்பிரஸ்தர்கள் ஒருவராயினும் காணப்படுவதில்லை. அதனல் மிகுந்த பரிசுத்தம்பொருந்திய அம் மகான்களினாசிரமத்தையே நிந்திப்பது எங்ஙனம்? அருமையான இவ் வானப்பிரஸ்தாசிரமத்தை இகழ்ந்து மனையாளுடன் கூடி மகிழும் கிரஹஸ்தாசிரமத்தையே புகழ்ந்துகொண்டாடுபவர் கலியை விலக்கித் தருமத்தையறிவார்களா? அறியவே மாட்டார்கள். கலி புருஷன் மிகுந்த கோலாஹலத்துடன் இவர்களிடத்திற்றான் நிர்த்தனஞ் செய்துகொண்டிருக்கின்றான். எப்படியென்றால், சிஷ்டர்களுக்குத் துஷ்டர்களும் புண்ணியபுருஷர்களுக்குப் பாபிகளும் சுரோத்தியர்களுக்கு வேதாக்ஷரமொன்றேனும் காதிற் கேட்காது, இங்கிலீஷையே முக்கியமாகக்கொண்டவர்களும் யாகத்தில் அமிர்தத்தைப் புசிப்பவர்களுக்கு மாம்சத்தைப் புசிப்பவர்களும், சோமயாஜிகளுக்குக் கள்ளுண்பாரும், சாந்தர்களுக்குக் குரூரர்களும் காலக்கொடுமையாற் புத்திரர்களாய் வாய்த்தார்களே! சிவ! சிவ! இவ்விதமாயுலகத்தவர்களின் தற்கால நிலைமையை யறிந்தும் உலகத்தை நிலையற்றதெனக் கருதி அதனை ஒருவாறொழித்து யோகமார்க்கத்தை யாசிரயித்து வனஞ் சென்று உலகம் நன்னிலையடையுமாறு தவஞ்செய்வாரொருவருமில்லையே. எப்பொழுது ஒருவராவது விகனஸ் மஹரிஷிகூறியதருமத்தைச்சம்பிரதாயமா யனுஷ்டித்து மகரிஷியாவாரோ அப்பொழுதுதான் நம்மத ரகஸ்யம் நன்குவிளங்கும். இப்பொழுதோ மேலான அவ் வானப்பிரஸ்தாசிரமத்தை ஆங்காங்கு சிலர்தோன்றிக் கெடுத்துவருகின்றனர். எப்படியெனில், சூத்திரர்களுட் சிலர் சடை, தாடி வளர்த்தும்காஷாயம் கிருஷ்ணாஜினம் உடுத்தும் யோகதண்டம்வகித்தும் சரீரம்முழுவதும் விபூதி

[illegible]

யணிந்தும் சிலர் மௌனவிரதங்கொண்டும் சிலர் மூட்பாதுகையில் நடந்தும் சிலர் சுக்குமாந்தடி வகித்தும் சிலர் கையில் கப்பறையேந்தியும் சிலர் கோமுகந்தரித்தும் இவ்விதமாகப் பலவித வேஷங்கள் உடையவர்களாய்த் திரிகிறார்கள். அந்தோ! சிலர் இவர்களை முனிகளென்றும் சுவாமிகளென்றும் பெயரிட் டழைக்கின்றனரே. வானப்பிரஸ்தாசிரமத்திற் கிவ்விதமானதுர்த்தசை நேர்ந்தது கலியின் கொடுமையாலன்றோ.

இன்னும்வரும்.

இக்காலத்திற் சோதிடதுர்த்தசை

(54-வது பக்கத்தொடர்பு)

ஆரியர்காள்!

திருக்கணித பரஹிதங்கள் வெவ்வேறு விதமாயிருக்கின்றமையால் அப் பஞ்சாங்கங்களும் ஒன்றற்கொன்று பேதப்படலாம். வாக்கியபஞ்சாங்கங்களுள்ளேயேஒன்றற்கொன்று பேதம் வருதல் யாங்ஙனம்? இதனைவைதிகர்கள் கவனித்திலர்போலும். அவர்கள் திருக்கணிதபரஹிதபஞ்சாங்கங்களில் ஏதேனும் வித்தியாசமிருப்பின் வேத வழியை இவ்விதம் கெடுக்கிறார்களே என திருக்கணிதக்காரர்களிடத்தில் வருத்தமுறுகிறார்கள். அவர்களின்சிரத்தையை,என்னவென்றுரைப்போம். இவர்கள் வாக்கிய பஞ்சாங்கங்களில் இருக்கும் வித்தியாசங்களைத் தாம் உணர்ந்தாலும் அவற்றைக்குறித்துச் சிறிதேனும் விசாரமுறுவதில்லை. பாருங்கள் வாக்கியபஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் பல வேறுவகைப்பட்டுள்ளன. அவைகளுள் சிலவற்றில் வெளியில் கஞ்சனூர் அண்ணுவையங்காரால் கணிக்கப்பட்டதென்றும் உள்ளில் பிரசுரிததவருடைய பெயரோ வேறு ஒருவருடைய பெயரோ எழுதியும் இருக்கின்றது. வேறுசிலவற்றில் உள்ளும் புறமும் ஒரேவிதமாய் நெம்பர் போட்டும் இன்னும் பலபலவிதமாகவும் இருக்கின்றன. அவற்றில் கணித்தவரைவிட பிரசுரித்தவரின் பெயரே வெகுவாய்க்காணப்படுகின்றன. அவைகளை யாவர் கணித்துப் பிரசுரிக்கும்படிகொடுத்தாரோ அது ஈசனுக்கே தெரியும். அஃதெவ்வணமாயினுமாகுக. சூத்திரர்களாற் பிரசுரிக்கப்பட்டவைகளைப் பிராமணகுலத்திற்பிறந்த பண்டிதர்களும் அன்புடன் ஆதரித்துவருகின்றார்கள். அம்மட்டோ! வேதவேதாங்கங்களையும், தர்மசாஸ்திரங்களையும் சோதிஷத்தின் மூவகைப்பட்ட சித்தாந்தங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் கற்றுஉணர்ந்து தாம் கணித்ததை ஒரு விநாடியேனும் தவறாது பிரத்தியக்ஷமாய்க்காண்பித்த பண்டித சிகாமணிகளால் கணிக்கப்பட்ட பஞ்சாங்க ரத்தினத்தைத் தூஷித்தும் வருகிறார்கள். சாஸ்திரநியாயத்தை இவர்களுக்குப் பலமுறை யெடுத்துக் கூறினும் இவர்கள் பொறாமையை விட்டுப் பொது நன்மையை நாடி அவற்றை அங்கீகரிப்பதில்லை. இவர்களாற் செய்யப்படும் கர்மங்கள் எவ்விதம் பயனை விளைவிக்கும். ஓ! வைதிகர்களே! மாற்சரியத்தைவிட்டுச் சாஸ்திரங்களை ஆராயுங்கள். பெரியோர்களின் அருள்வாக்கியங்களைக் கேளுங்கள்.

வரும்

வெங்கடராமசாஸ்திரி.

பத்ரிகா:

பத்ரிகாலேககாபிப்ராயாணாம் பத்ராதிபா
ந ப்ரதிபுவ:

ஆர்யாவர்தஶ்ச,
ஜாதிபேதஶ்ச.

ஆர்யதேஶாபிமாநிந: ! [illegible]

[illegible]

ப்ராஹ்மணோऽஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜந்ய: க்ருத:। ஊரூ ததஸ்ய யத்வைஶ்ய: பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத

ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ராஶ்சத்வாரோ வர்ணா:, தேஷாம் வர்ணாநாம் ப்ராஹ்மண ஏவ ப்ரதாந இதி வேதவசநாநுரூபம் ஸ்ம்ருதிபிரப்யுக்தம் [illegible] ஸாக்ஷ்ய

கடிதம்

கடிதகர்த்தர்களினபிப்ராயம் பத்திராதிபரைச் சாரா

ஆரியாவர்த்தமும்
ஜாதிபேதமும்

ஆரியதேசாபிமானிகாள்!

சிறிது இங்கு கவனியுங்கள்

நமது ஆரியதேசத்துக்கனுகூலமாயமைந்திருக்குமிவ்விஷயத்தைப்பற்றிப் புறத்தேசத்தாரனேகர் தம்மனம்போனபடிபேசி அதனுண்மையைச் சிறிதுங் கவனியாது தம்மனத்திலெண்ணியதையே சித்தாந்தமாகக்கொண்டு தான்கெட்டதுமன்றி தம் மக்களையுங்கெடுக்கக்கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஜாதியானதெதற்காகவேற்பட்டது? அதில் ப்ராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரனென நான்கு மாத்திரம் ஏன் ஏற்படவேண்டும்? இவையெல்லாம் ப்ராம்மணர்களின் கட்டுப்பாடேயன்றி வேறல்லவென்றும் ஆண் பெண் இரண்டுதான் பேதமேயன்றி வேறு ஜாதி பேதமெதற்கென்றும், ஜாதி பேதத்தால் இந்தியாவில் ஒற்றுமை யில்லாமல் போயிற்றென்றும், 'என்று ஜாதிபேதமொழியுமோ' அன்றுதான் இந்தியா ஐக்கியப்படுமென்றும், இந்தியாதேசம் விருத்தியடையவேண்டுமானால் எல்லோரும் ஜாதி பேதத்தைவிட்டு சமரசமாயிருக்கவேண்டுமென்றும், பூர்வத்தில் வியாசர் ஓடக்காரி வயிற்றில் பிறந்தவரென்றும், விசுவாமித்திரர் க்ஷத்திரியராயிருந்தவரென்றும், அவர் பிறகு பிராம்மணனானாரென்றும் 'ப்ரஹ்மஜா வேதா: ப்ராஹ்மணா:' ப்ராம்மணனானவன் யாரோ அவன்தான பிராம்மணனென்றும் பலவிதக் குருட்டுவழிகளைக்காட்டி நமது சிறுவர்கள் மனதைக் கலக்கி விடுகிறார்கள். அந்தோ! அந்தமொழியையும் கேட்டுக் கெட்டுத் தொலைகிறார்கள். நம் தேசத்தில் ஜாதி பேதமானது வேதத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. 'ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ராஶ்சத்வாரோ வர்ணா: தேஷாம் வர்ணாநாம் ப்ராஹ்மண ஏவ ப்ரதாந இதி வேதவசநாநுரூபம் ஸ்ம்ருதிபிரப்யுக்தம்' வேதமே இச்சாதிபேதத்தை விதித்திருக்கிறது. அது நமக்குச்செல்வமேவோ பெருந்தன்மையையும் கொடுக்கிறது. இதனாலெப்படியொற்றுமையுண்டாகுமென்றால்? ஒரு வீட்டில் நான்கு புத்திரர்களிருக்கிறார்கள், நான்குபுத்திரர்களுமொற்றுமையாயொரே குடித்தனமாயென்றுஞம் பிரியாமல் வாழவேண்டுமானால்வர்கள் செய்யவேண்டுவதென்ன? ஒவ்வொருவர் ஒவ்வொரு வேலையைக் கைக்கொண்டு முயன்றால் குடித்தனம் என்றுஞம் தளராமல் வளரவும் தாமும் சௌக்கியமாய் ஜீவிக்கவும் வந்தவர்களை யாதரிக்கவும்முடியுமல்லவா? அதுபோலவே இவ்வித்தியாவென்னும் வீட்டினிடத்தில் வேதமெனுந் தாய் விதித்தபடி பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்தி

[illegible]

ரன், என்ற நான்கு புத்திரர்களும் ஒவ்வொரு வேலையைக் கைக்கொண்டார்கள். எப்படியெனில் பிராம்மண னெல்லோரும் மோக்ஷ சாதனத்திற்காக வேதம் வேதாங்கம் இவைகளைக் கற்று யாகம் அக்னிஹோத்திரம் வைசவதேவம் முதலியகர்மாக்களைச் செய்து பரிபக்குவமடைந்த ஞானத்தால் வேதாந்தியாகிறான். க்ஷத்திரியன் மற்ற மூன்று வருணத்தாரையும் ரட்சிக்கவேண்டிய நிமித்தம் யுத்தம் முதலியவைகளிற் சென்று ஜயமடைகிறான். வைசியன் மற்ற மூன்றுவருணத்தாருக்கும் வேண்டியவைகளைத் தலையிலிருந்து கொண்டு வந்துகொடுத்து ஐசுவரியவானாகிறான். சூத்திரனோ மற்ற மூன்று வருணத்தாருக்கும் உபயோகமாகும்பொருட்டுப் பயிரிட்டெல்லோருக்கும்கொடுத்துத் தானுஞ் சுகமடைகிறான். இதிலெவ்வளவொற்றுமையும் சகோதர பாவத்துவமுமிருக்கிறது. முற்காலத்தில் பிராம்மணனென்றால் மற்ற மூன்று வருணத்தாரும் மிக்கவிசுவாசமுடையவர்களாயிருந்தார்கள். அங்ஙனமேனையோர்களும் அவர்களிடத்திருந்தார்கள். ஆனதினால் ஜாதிபேதமானது ராஜ்யம் சுகமாயிருக்கவும் எல்லோரும் சகோதர பாவத்துவமாயொற்றுமையாயிருக்கவுமெல்லோரு மேகோபித்து ஒரு காரியத்தை நடத்த மிக்க சௌகரியமாகவுமிருந்தது. பூர்வத்திலெல்லா வருணத்திலும் சம்பந்தமிருந்தது. அதில் பிறக்கும் பிள்ளைகளுக்குச் சங்கரஜாதிகளென்றும் அவர்களுக்கு கலைக்ஞானங்கள்தொழிலென்றும் பல ஸ்மிருதிகளில் கூறியிருக்கிறது. இக்காலத்திலோவ்வொருவரிடத்திலும் கலியரசன் கடாக்ஷத்தால் அகங்காரமும் மமதையும் வளுத்ததால் சண்டையிட்டுக்கொள்ளுகிறார்கள். இதனால் ஜாதிபேதந்தப்பிதமெனக்கூறுவது அறிவீனம். மற்றும் நான்குஜாதிகளும் இவ்வொற்றுமையை யுண்டாக்கிச் சகோதரர்போல் வாழவே ஏற்பட்டதேயன்றிச் சண்டை யிட்டுக்கொள்ளவல்ல. இதையெப்படிபிராம்மணர்கள்கட்டுப்பாடுசெய்வார்கள். இமயமலைமுதல் கன்னியாகுமரிவரையில் அளாவிய இக்காட்டில் எங்குதான் ப்ராம்மணர்சென்று இக் கட்டுப்பாட்டை வளர்க்கமுடியும். அப்படியவர்கள் கட்டியிருந்தால் அவர்களுக்கன்றோ ராஜ்யாதி பத்தியம் முதலிய கௌரவமும் ஐசுவரியம் முதலிய பலமும் வேண்டும். அவர்களப்படியல்லாது தனக்கொன்றும் வேண்டாமென்று காடுகளிலுள்ள குளங்களிலும் மரத்தடிகளிலுமிருந்து மற்றமூன்று இனத்தார்களிடத்திலும் பிக்ஷைவாங்கித்தின்று தனக்கென்றொன்றும்வேண்டாமலிருப்பானேன்? இவை யெல்லாம் யோஜித்தால் இவர்கள் கட்டுப்பாட்டை மற்றவர்களேன் கேட்கவேண்டும்? கேட்டதுமன்றி யடங்கியிருப்பானேன்? இவர்களைப்போன்ற மதி யூகிகள் அப்பொழுதுமின்றுமிருப்பின் அடங்கி யிருந்திருக்கமாட்டார்கள். அவர்கள் சாதுக்கள். அதனுலடங்கிவிட்டார்கள்போலும்! இதெல்லாம் வீணானது விபரீதத்தன்மையன்றி வேறல்ல. மற்றும் ஜாதி பேதம் தலைக்கால்தான் இந்தியா ஐக்கியப்படுமென்றால் முன் பேதமிருந்தபோது என் ஐக்கியப்பட்டிருந்தது. முன்னெவ்வள

[illegible]

வுநன்னிலைமையிலிருந்தது. எவ்வளவுபெருத்த உபகாரமான காரியங்கள் நடந்தது? எவ்வளவு கீர்த்தியைப் பெற்றிருந்தது. எவ்வளவுவைதிக நாகரீகம்பெருத்திருந்தது. அதெல்லாம் இப்பொழுது குலத்துக்குக்கேடு கோடரிக் காம்புகளாய்த்தோன்றிய குழுக்கூட்டத்தால் தொலைந்ததேயன்றிவேறல்ல. ஐக்கியமுண்டாவதற்கு ஜாதிபேதமேன் போகவேண்டும்? ஏதோமனம்போனபடி பேசுவதில் பயனென்ன? பூர்வத்தில் வியாசர்முதலியோர் சூத்திரயோனியில் பிறந்தார்களே அவர்களுக்கேன் பிராம்மணத்துவமுண்டாயிற்றெனில் ஜாதியென்பதற்கு விந்துதான் பிரதானமேயன்றி யோனி பிரதானமல்ல. 'பீஜம் ப்ரதாநம் யஸ்மாத் லோகே' என்றதால் பீஜத்தையேபிரதானமாய்க்கொள்ளவேண்டும். இதைப்பற்றிமனுவும் 'பீஜஸ்யைவ ச யோந்யாஶ்ச பீஜமுத்க்ருஷ்டமுச்யதே' என்று கூறியிருப்பதால் பீஜமே காரணமென்றேற்படுகிறது. அதுவுமன்றி 'தேஜீயஸாம் ந தோஷாய' என்றுமகிமையுள்ளவர்களுக்குத்தோஷமில்லையாகையால்அவர்களுக்கு பிறந்தாலென்ன? அவர்கள் ஈச்வரத்தன்மையுடையவர்களே ஒருக்கால் 'அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி' என்றுகோபம்வந்தகாலத்தில் வேறு இந்திரனையும் வேறு சுவர்க்கலோகத்தையும் சிருஷ்டிக்கவல்ல விசுவாமித்திரர்முதலிய மஹான்களுக்கு எவ்விதமானஜாதிபேதத்தையுமவர்களிடத்தில் கற்பிப்பது பேதமையானதால் இவ் விஷயத்தில் வீணில் பலர் பிரவேசித்துக் கெட்டலைகிறார்கள். இதுவரையிலெவ்வளவோ தலைகள் இங்ஙனங்கூறிச் சென்றது. இப்பொழுதும் சிலர் தோன்றியிருக்கிறார்கள். இதெல்லாம் இந்தியாவிற்கு ஒர்லட்சியமோ? இல்லை. இந்தக் குதர்க்கச் சண்டையில் காலங் கழிப்பதை விட்டு நம் சமயத்தைக்காப்பதில் நம் அருமையான காலத்தைக் கழித்தால் நாமும் சுகம்பெறலாம்; மகிமைதங்கிய மஹாத்மாக்களின் கீர்த்தியை உயர்த்தலாம். வேதத்தின் மகிமையை வளர்க்கலாம். சொன்னேம் சொன்னேம்சுபம் ஆஸ்திகதாஸன்.

கூ! கூ! கலி! கலி!

வாருங்கள்! வாருங்கள்!

பாருங்கள்! பாருங்கள்!

சிறிது இங்கு கவனியுங்கள்

கலியின் கொரோத்தைக் கேளுங்கள். இதுகாறும் நம்மவருக்குநேர்ந்த விபரீதங்களுக்கு ஓரளவில்லை. ஆயினும் மேன்மேலும் காணப்படும் கொரக்காட்சிகளையும் ஆபத்துச் சத்தங்களையுங் கேட்கக் கேட்க எமது மனம் புண்படுகின்றதே. நம் தேசத்திற்கும் மதத்திற்கும் பாஷைக்கும் ஆசாரத்திற்கும் நேர்ந்திருக்கும் விரோதங்களுக்கோரளவுண்டா? நாம் அருதியாயனுபவித்துவரும் அனைத்தையும்விட்டு புறநாட்டார்கொள்கைகளைக் கடன் வாங்கிக்கொள்ளுகிறோம். இக்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கலியின் கொடூரத்தால் நமக்கு நேர்ந்திருக்கும் விபத்துகள் என்னவெனில், கேளுங்கள் பாருங்கள். முதலில்மத விஷயத்தைக்கவனிப்போம்- நமதருமையான ஆரியமதத்திற்கு பரமத் துரோகிகளின் விதண்டாவாதங்களை நம்மவர் பார்த்தானந்திக்கிறார்கள் கேற்றுத் தோன்றிக் கனைத்துப் பெருத்துப் பூத்தக்காய்த்துப் பழுத்து உதிர்ந்து எரிந்துபோகக்கூடிய அனேக மதங்கள் நம் காட்டினுட் புகுந்து நம்மவர் மனத்தைத் தெளிந்த நீரோடைகளில் யானைகள் புகுந்து சேறும் தண்ணீருமாய்க் கலக்குவதுபோல் கலக்கிவிடுகிறதே- கண்டதே காட்சி கொண்டதே கோலமென அனேகாதோன்றி வீண் விபரீதங்களையெல்லாம் உண்டாக்குகிறார்களே, அதுவும் போதாதெனப் பூர்வம் நம்நாட்டை விட்டு துரத்தப்பட்ட பௌத்தமதத்தினர் இப்பொழுது நமக்குப்புத்திசொல்ல வந்துவிட்டார்களே- நம் நாட்டுப் பறையர்களைத் தம்மினத்தாரெனக் கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் பங்கிட்டுக்கொள்ளுகிறார்களே. நம்மதத்தினுண்மையையறியாது நம்மவரில் அனேகர் நம்பெரியோரைத் தூஷித்துக் கண்டபடியெல்லாம் இகழ்கிறார்களே. நம்மவரிடத்தே உள் மதக்குரோதம் வலுத்து உட்கலகமுண்டாகி ஒருவருக்கொருவர் பகைவளர்த்துத் தானும் கெட்டுத் தன்னினத்தாரையுங்கெடுத்துக் கெட்டுத்தலைகிறார்களே- நம் மதத்தினுண்மையான ரகசியத்தைக் கவனியாது வீண் கதைகளைநம்பி வீணாகிறார்களே- இம்மட்டோ! அனேகர் ஆலயங்கட்குப் போவதில்லை- மதசாஸ்திரத்தைக் கவனிப்பதில்லை- நம் மதக்கொள்கை இவ்விதமெனப் பலருக்குத் தெரியாதென்றால் அதைவிட வேறென்ன கூயகெதி வேண்டும்- இவ் விஷயத்தை வீணில் வளர்த்தால் பத்திரிகையின்கோணத்தையேராளமாய் நிரப்புமானதால் விஷயத்தைத் தொடருவாம்- நாம்பேசும் தமிழ் முதலிய பாஷைகளோ அல்லது எல்லாவற்றிற்கும் தாய் பாஷையான சம்ஸ்கிருதமோ அவைகளை ஆயிரத்திலொருவர் கவனிப்பார்களா? கவனித்தவர்களில் நூற்றிலொருவர் படிப்பார்களா? படித்தவரில் நூற்றில் ஒருவர் அதன் பெருமையை யறிவார்களா? இமயமலை முதல் கன்னியாகுமரிவரையில் விரிந்த இத்தேசத்திலெவ்வளவு பாஷைகள் பேசப்படுகிறது கணக்குண்டா? ஏராளமான பாஷைகள் பேசுகிறார்களே, அதற்கெல்லாந்தாய்ப் பாஷையான சம்ஸ்கிருதமானது தற்காலத்தில் மேற்றிசையாரால் (Dead language) இறந்தபாஷையென வழங்கப்படுகிறதாமே- அந்தோ! நாம உயிரோடிருக்கவில்லையா? எம்மஹான்களெவ்வளவோ சிரமப்பட்டு வளர்த்த பாஷையல்லவோ? அப் பாஷைக்கிக்கெதிநேருமா? அதை மேற்றிசையில் ஜர்மனியில் அனேகர் படித்துக்கொண்டாடுகிறார்களே? அப்பாஷையின் பெருமையை நம்மவரறியவில்லையே? இப் பொழுது நம் பாஷையைத்தக்கபடி படித்துச் சாஸ்திரங்களைக் கற்று உபந்நியசிக்கத்தக்க மஹான்களொருவரிருவர் தவிர அனேகரைக் காணவில்லையே- நம்மவர்கள் பாஷாபிமான

[illegible]

மென்பது சிறிதுமில்லாது புற பாஷையே தேவபாஷையெனக்கொண்டு விலைமொழி யலேகிரார்களே- கமதாசாரங்களும் அடியோடுதுலையக்காலம் சேர்ந்துவிட்டதே-நம் சிறுவர்களெல்லோரும் மேற்றிசை வேஷம்பூண்டு திரிகிறார்களே! சந்தியாவந்தனமென்பது காலத்தில்காணவில்லையே! அனேகரதைப்பற்றி நினைப்பதுமில்லையே! வேத கோஷமென்பது எங்கு இருக்கிறதெனத் தேடும்படி சேர்ந்து விட்டதே! நம்மருமையானவேதத்தைப் போலிப் பாஷையில் தொகுத்துப் பக்தியில்லாப் பாமரர்களும் படிக்கலாயிற்றே- ஆரியமணிகளுக்குப் பிறந்த அரும்புதல்வர்கள் மேற்றிசைக்குருவைச் சேவிக்கலாயிற்றே- ஆரியரென்றுயர்ந்தபெயர்பெற்ற நமக்குஅயல்நாட்டார் புத்தி கூறசேர்ந்ததே-ஆரியதேசமெனுமருமையானதேசத்திலஞ்சாதபாவங்களெலாம் நடக்க சேர்ந்ததே- உத்தமமான வர்ணாச்சிரமிகள் சிலரையேனுங்காணேமே, எங்குகண்டாலும் கொள்ளைநோய்வந்து நம்மவரைப் பங்கிட்டுக்கொள்கிறதே- பஞ்சம்வந்து பரிதவிக்கச் செய்கிறதே- பூகம்பங்களுண்டாகிப் புண்படுத்துகிறதே- மழையில்லாது பரிதவிக்கச்செய்கிறதே- ஆறுகளில் ஜலமில்லாது அவற சேர்ந்துவிட்டதே- கண்டவிடமெல்லாம் விபரீதவார்த்தைகளேகேட்கிறதே! அருமையான குலமாதரெலாஅம்பலத்துக்குவந்து வேசைகளாய் வெளியில்திரிகிறார்களே! என்செய்வோம்! என் செய்வோம்! ஓ! ஓ! கலியரசனே! உனது கொடுமையை இனிச் சகியோம்- எங்களை இப்படி வதைக்கவேண்டாம்- உமக்கு நாங்களென்ன அபராதம்செய்தோம்- உனது பாலியப்பருவத்திலேயே இப்படியிருப்பாயானால் உனது யௌவனத்திலும் மற்றப்பருவங்களிலேயும் எப்படியிருப்பாயோ அறியோம்-

ஓ! ஓ! எங்கள் ரிஷீசுவரர்களே! மஹாத்மாக்களே! ஏனிப்படிவேடிக்கை பார்க்கிறீர்கள்! கலியரசனின் அநீதியால் நாங்கள்படுந் துயரத்திற்கோரளவில்லையே! உங்கள் அருந்தவத்தால் பிறந்த எங்களை இப்படிக் கைவிட்டு நீங்கள் சுகமேயிருப்பது நியாயமோ? நீங்கள் பூர்வீகத்தில் அதைச் செய்தோம் இதைச் செய்தோமென எழுதிவைத்ததெல்லாம் பொய்யா? எங்களையிக்கலியனுலெரிக்கப்படுகிற அனீதியென்னும் தீயினின்று விலக்கமாட்டீர்களா? நாங்களின்னுமுங்களை மறக்கவில்லையே- எங்கள்தெய்வமே! ஓ! எங்கள் குலவிளக்கே! சிறிது கடைக்கண் பார்க்கமாட்டீர்களோ! எங்களைக்காக்கமாட்டீர்களோ! இனி நாங்கள் சகியோம்- வேறு கெதியுமில்லை- எங்கள் மக்களெல்லாம் பரிதவித்தலைகிறார்கள்- எங்கள் பத்னிகளெல்லாம் பயந்தொளிகிறார்கள்-

[illegible]

[illegible]

[illegible]

இளியேனுமெங்களைக்கண்திறந்து பார்க்கமாட்டீர்களா? ஓ! ஓ! எங்கள் கருணையங்கடலே! அடியார்க்கடியனே! அகிலத்துக்கும் நாதனே! அன்பாக்கன்பனே! ஓ எங்களானந்தவியல்பே! அருட்பரஞ்சோதியே ஆதியே! அனாதியே சோதியே! சுடரே! சுடர்மணிவிளக்கே! எங்களன்பே! ஆனந்தமே! சிறிது எங்களைக் கடாட்சித்தருள்வையோ! எங்கள் செல்வமே இப்பொழுதெமக்குநேர்ந்திருக்கும் விபரீதங்களைதாமறியாததோ! சேண்மின் எமதாண்டவரே அருளே அருட்பெருஞ்செல்வமே எங்கள்கஷ்டத்தைக்கவனியாயோ எமது கலியைத் தீராயோ கண்ணைத்திறவாயோ காப்பதை நினையாயோ இதுவேதருணம் இதுவேதருணம் இனியெங்களால் சகிக்கலாற்றாது நாங்கள் கலியன் பெருந்தீயால் வெம்புகிறோம்-

[illegible]

பெருந்தகையை நமஸ்கரிக்கிறோம்-

சுபம்-

ஆஸ்திகதூதன்.

யாஜுஷோபாகர்மநிர்ணயம்

வேறொன்றையுமெடுத்துக்கொள்ளக் கூடாதாகையால் இவைகளுக்கே பொருஸமப்படுத்தி அர்த்தம்செய்துகொள்ளவேண்டும். சிராவணி முதலியவைகளுள் முதற் கூறியதற்குத் தோஷம் சம்பவித்தால் மற்றதைக் கிரஹித்துக் கொள்ளவேண்டும், எல்லாந் துஷ்டமாயின் முக்கியத்தையே கிரகிக்கவேண்டியது. அதில் முதலாவதுபாகரணமாகில் சாந்திசெய்தும் மற்றதானுல் சௌகரியம்போலும் செய்யவேண்டும். இதுதான் வைத்தியநாததீட்சிதிய வியாக்கியானமாகிய ஸ்மிருதிமுக்தாபலப் பிரபைசெய்தவர்களின் அபிப்ராயம். அதைநன்றாய்ப்பரிசோதியுங்கள், ரிஷிகள் சொன்னதையெல்லாம் சேர்த்து அர்த்தம்செய்யுங்கள். பெரியோர்கள் கூறியதைக்கொஞ்சமாவது நிந்தனைசெய்யக்கூடாது. இன்னுமுபாகரண நிர்ணயத்தில் ராஜமார்க்கமாய் ஏற்பட்ட இதை வித்துவான்கள் அங்கீகரிப்பார்களாக- இதனால்கிடைத்தது யாதெனில், மூன்றுகாலமும் துஷ்டமானுல் சிராவணி

[illegible]

இதி

[illegible]

வெங்கடஸுப்ரஹ்மண்யஶர்மா.

தான் காலம்- ஆனால் இதுதான்பேதம்- யாதெனின்:- பிரதமோபாகரணமானால் சாந்திசெய்து செய்யவேண்டுமென்பதுதான்- .சிராவணிக்குத் தோஷம் சம்பவித்தால்ப்ரௌஷ்டபதியும் அதற்குந் தோஷமாயின் ஆஷாடியுங்காலமாம்- இந்த நியமம் ஆபஸ்தம்பிகளுக்கும் மற்றவர்களுக்கும் சம்பவிக்கிறவரை வைத்துக்கொள்ளவேண்டும்- ஆகையால் மித்திரனே நன்றாய்க் கவனித்துப்பாரும்- சாஸ்திரங்களைப் பரிசோதனைசெய்துபாரும்- கோபங்கொள்ளவேண்டாம். ஆக்கிரகப்படவேண்டாம்- பொது நன்மையை நாடும்- இது தான் உமக்கு ஹிதம்- நீர் கேழ்க்காவிடினும் சொல்லவேண்டியதை நான் சொல்லுகிறேன்- பெரியோர்களை நிந்திப்பது அழகன்று- வித்தியாசோதரனான உமக்கு இது சிரேயஸ்ஸைக்குறைக்கும்- நானிவ்வளவு சொல்லியதும் சிநேஹத்தாலன்றி வேறில்லை- நீர் எமது குருநாதனுடன் கல்விகற்றவர்களான ப்ரம்மஸ்ரீ சங்கரசாஸ்திரிகள் அவர்கள் சிஷனெனக் கேழ்வியுற்றோம்- அதனால் நம்மிருவருக்கும் மகாமகோபாத்தியாயப் ப்ரம்மஸ்ரீ தியாகராஜமகிபுங்கவர் அவர்கள் மூலமாய் வெளிவந்த சிவாத்துவிதவித்தையில் சகோதரத்துவமிருக்கிறது- ஆனதுபற்றி நேசனே உமது இந்தவிதண்டையைத் தள்ளவேண்டுமாய் வேண்டுகின்றனம்- ரிஷிகள் கூறியதை அப்பிரமாணமாய் விட்டுவிடாமல் எல்லாவற்றிற்கும் ஐக்கியம்செய்து அவைகளொன்றுக்கொன்று வித்தியாசப்படுமானால் தன் கிருஹ்யத்தில் கூறியதை யனுஷ்டித்து மற்றதை மற்ற விஷயத்தில் சேர்க்கவேண்டியது- இவ்வருஷத்தில் சிராவணி, பாத்திரபதி இவைகளுக்குச் சுக்கிரமௌட்டியதோஷம் சம்பவித்தபடியாலும் துஷ்டகாலத்திலுபாகரணஞ்செய்தால் வெகு கெடுதலுண்டெனச் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் தோஷமற்றதாக ஆஷாடியிலிருக்கிறபடியாலும் சிராவணியிலேயே செய்யவேண்டுமென்றபிடிவாதத்தை வைத்துக்கொண்டவர்கள் நிர்ணயசிந்துவில் கூறிய பிராயச்சித்தத்தைச்செய்து சாந்திபூர்வமாகவே யனுஷ்டிக்கவேண்டியதெனத் தெரிவித்தோம்- அவர்களும் பொறாமையை யொழித்துப் பெரியோர்கள் கூறிய தருமவசனங்களைப் பரிசீலனைசெய்து தருமத்தைமாத்திரம் கைக்கொள்வார்களென நம்பி இறகேர்கிறோம்- இதைக்கண்டபண்

[illegible]

[illegible]

[illegible]

குச் சென்றால்தான் ஆவானா? அல்லது வைதிகநாகரீகத்தை ஒழித்தாற்றானோ? அவர்கள் காலத்துக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ளவேண்டும். பழைய வைதீகம் இப்பொழுது நடவாதென்று முறையிடுகிறார்கள். பழைய வைதீகம் வேறு புதிய வைதீகம் வேறு நபக்கல்ல. இப்பொழுது நம்மவர் தேசாந்தரத்திற்குச் செல்லல் ஆகாதென்பது எதின் பொருட்டென்றால், நம்மவரது வைதிக கர்மாக்களுக்கு வெகு குறைவு நேரிடுமென்பது மற்றும் ஆகாரத்திற்கு அனேககுறைவுகளுமுண்டாகும். சிலநாளைக்குமுன் கல்கட்டா, பாரிஸ்டர் மிஸ்டர் பனர்ஜியின் மூத்த குமாரத்திக்கும் இங்கலாண்டில் பாரிஸ்டராயிருக்கும மிஸ்டர் அலெக்சாண்டர் பிளேருக்கும் நடந்த விவாகம் எந்தச் சுகிர்தத்தை நம்நாட்டுக்கு விளைவிக்கும். அவர்களுக்குப் பிறக்கும் மக்களை இந்தியரென்றழைப்பதா? ஆங்கிலேயரென்றழைப்பதா? நம் நாட்டவர் பிறதேசங்களுக்குச் செல்வதால் எந்த நன்மையைத் தருவார்கள்? தேசங்கட்குச்சென்று குலம், சிலம், கர்மம், ஆசாரம் முதலிய எல்லாவற்றிலும் இருந்து விலகிக் கெட்டுப் போனாலும் லோகத்துக்கு உபகாரத்தை விளைக்கக்கூடியபுத்திசாலி ஒருவன் அங்கு சென்றால் நம் தேசத்துக்குமிக்க உபகாரமாயிருக்குமென்றாவது கூறலாம். ஒன்றுக்கும் உதவாத சோடைகள் வயிற்றுச் சோற்றுக்கு விங்கி இங்கு பிழைக்கத் தெரியாமல் தூரதேசங்கட்குச்சென்று எல்லாவற்றையும் விட்டுப் பரமபாஷண்டனாய்த் திலேவதைப்பார்க்கிலும் நம்நாட்டிலிருந்துவிடுவது நலமல்லவா? நம்நாட்டாரெப்பொழுதும் எந்தச் சுகத்தைத்தேடுபவர்? எந்தச் சுகத்தைத் தேடியதால் நம்நாட்டுக்கீர்த்தி பெருகியிருக்கிறதென்று பார்ப்போம். முக்கியமாக நமது பூர்வீகத்து மிகப்பெருமைபெற்ற ரிஷிகள் முதற்கொண்டு இப்பொழுதுள்ள ஆரியபிக்ஷுவில் உதித்த சிறுவன் வரையில் ஒவ்வொருவனுக்கும் பரலோகவிசுவாசம் என்பது மனத்தில் குடிகொண்டிருக்கும் நம் நாட்டில் எந்த விஷயத்தையும் தேவதாபிரீதியாகச்செய்வதேயொழியத் தன்வயிற்றுக்கு மாத்திரமல்ல. பாருங்கள் நமது பூர்விக அரசர்கள் காலத்தில்எந்தக்காரியத்தைத்தொட்டாலும் தெய்வத்திடத்து நம்பிக்கையால் எதையும் அதன் தலையிற் சுமத்தியிருந்தார்கள். நமது மஹாத்மாக்கள் பரலோகசுகத்தைக்கவனித்தவராதலால அவர்களிருந்த விடத்திலிருந்து தனது பரலோக காரியங்களை முக்கியமாகவும் மற்றக் காரியங்களை அதற்கு இரண்டாவதாகவும் நடத்திவந்தார்கள். நம்மவர்கள், தேசம் சிதோஷ்ண ஸ்திதி ஆகாரம், ஆசாரம், சௌக்கியம், வாசஸ்தலம், சத்சகவாசம், காருண்யம், தெய்வநம்பிக்கை, பரலோக விசுவாசம், வேத நம்பிக்கை, இவைகள் ஒவ்வொன்றையும் அணுவணுவாகக் கவனிப்பார்கள்.

வரும்.

ஆஸ்திகதூதன்.

[illegible]

[illegible] (தாராபுரம்) [illegible] (சுந்தரமய்யன் அக்கிரகாரம்) [illegible]

௧. [illegible]

௨. [illegible] (சேலம்) [illegible] (காலேஜ்) [illegible]

௩. [illegible]

௪. [illegible]

ஓர் விண்ணப்பம்

ஸ்ரீ [illegible] ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் அவர்கள் சமுகத்துக்கு.

தாராபுரம் தாலுக்கா கஸ்பா தாராபுரம் சுந்தரமய்யன் அக்கிராரத்திலிருக்கும் ஆந்திரபாஷானுஷ்டான ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய அடியிற் கையொப்பமிட்டிருக்கும்நாங்களனைவரும்எழுதிக்கொள்ளும்விண்ணப்பம்.

1 இப்பவும் நாங்களனைவரும் ஆபஸ்தம்ப சூத்திரிகளாய் திரிபுருஷகாலமாய் பிண்ட பிதிருயஞ்ஞ விதிப்படி திரிபிண்ட விதாயகமாய் சிராத்தாதிகளை நடத்தி வருகிறோம்.

2 அப்படியிருக்க எங்கள் பந்துவாகிய சேலம் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ ராமய்யங்காரவர்கள் திரிபிண்ட விதாயகம் உசிதமாகக் காணப்படவில்லையென்றும் சாஸ்திர விரோதமாய் இருக்கிறதென்றும் ஷட்பிண்ட விதாயகத்தையே ஆசரிக்க வேண்டியதென்றும் நிர்ணயஞ்செய்து அந்தப்படிக்கு இந்த 5-6 வருஷங்களாய்நடத்திவருகிறார்கள்

3 தவிர எங்கள் வகையறுக்களில் மற்றுஞ் சிலரும் இந்த ஒருவருஷ காலமாய் அவரால் எழுதியனுப்பப்பட்டிருக்கும் விதாயகத்தைப் பிரமாண்டமாகக்கொண்டு ஷட்பிண்ட விதாரணமாய் நடத்தி வருகின்றார்கள். அதற்கு ஷை ராமய்யங்கார் அவர்களால் எழுதியனுப்பபபட்டிருக்கும் ஷட்பிண்ட விதாயகவிவாண கோட்டுப்புஸ்தகமே ஆதாரமாயிருக்கிறது. ஷை கோட்டுப் புஸ்தகம் மேற்படி ராமய்யங்கார் அவர்களால் எங்கள்பந்துவாகிய ம-ா-ா-ஸ்ரீ கடத்தூர் ஸ்ரீநிவாச ஐயங்காருக்கு அனுப்பப்பட்டு இது விஷயத்தைப்பற்றி ஆக்ஷேபிப்பவர்களுக்குக் காண்பிக்கும்படி ஆதாரமாய் வைத்திருந்தார். அந்த கோட்டுப் புஸ்தகத்தை ஷை யாரிடமிருந்து தருவித்துத் தங்களுக்குக் காண்பித்து அதற்கு நகலுங் கொடுத்திருக்கிறோம்.

4 இப்போது எங்களில் சிலர் ஒருவிதமாயும் மற்றும் சிலர் வேறுவிதமாயும், அனுஷ்டித்து வருவதில் மனதிற்குக் கலவரப்பட்டு அனாதியந்த காலமாய் அனுஷ்டித்துவந்த முறையைவிட்டுவிடச் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்ததில் இப்போது தாங்கள் எங்களுக்குக் கண்டெடுத்த மாணிக்கம்போல் இவ்விடம் விஜயஞ்செய்திருப்பதில் எங்களுக்குள்ள சந்தேகத்தைத் தெளிவித்துக் கொடுப்பீர்களென்று விண்ணப்பஞ் செய்துகொண்டிருக்கிறோம். ஆகையால் கிருபை செய்து இதற்கு

[illegible]

வேண்டிய ஆதாரங்களுடன் எங்களுக்கு ஒரு பத்திரிகை கொடுத்து இதற்கு வேண்டிய ஆக்ஷேபனை விவரங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்யக்கோருகிறோம்.

விகாரிஞு }
தைமீ 4உ }

(ஒப்பம்)

பட்டுக்கோட்டை வெங்கட்டரமண ஐயங்கார்
தாராபுரம் பிரைவேட் வைகசில்
ஸ்ரீநிவாச ஐயங்கார்
வெங்கட்டரமண ஐயங்கார்
கொளிஞ்சிவாடி லக்ஷ்மண ஐயங்கார்
புக்களம் சேஷய்யங்கார்
சரம்பாகவதம் குப்புசாமி ஐயங்கார்
முத்தூர் இராமய்யங்கார்
S. Venkataramana Ayenger
நவசாரிலக்ஷ்மண ஐயங்கார்.
கி. கு. சேஷய்யங்கார்
S. சேஷய்யங்கார். நவசாரி
பு. இராமகிருஷ்ண ஐயங்கார்
கொளிஞ்சிவாடி பி. என். கிருஷ்ணய்யங்கார்

[illegible]